பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள்**

இலண்டனில் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 13-10-2017 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் அதிகாரம் அஹ்ஸாபின் 41 வசனத்தை ஓதினார்கள்.

அதன் பொருள்:- முஹம்மது உங்களைப் போன்ற ஆண்களில் எவருக்கும் தந்தையில்லை ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதர் மற்றும் நபிமார்களின் காத்தம் ஆவார். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கு அறிபவனாவான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:- பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிராக அவ்வப்போது ஏதாவது சாக்குப்போக்குகளை எடுத்துக்கொண்டு அரசியல்வாதிகளும் ஆலிம்களும் தனது ஆவேசத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இது அவர்களுக்கு தனது கூட்டத்தை தன் பின்னால் வரச் செய்வதற்கான, தனக்கு ஆதரவை பெருக்குவதற்கான, தனது பிரபலியத்தை ஏற்படுத்துவதற்கான எளிய வழியாகும் என அவர்கள் கருதுகின்றனர். மேலும் முஸ்லிம்களின் உணர்வுகளை தூண்டிவிடுவதற்கு பயன்படுத்தப்படும் மிகப்பெரிய ஆயுதம் கத்தமே நுபுவ்வத் எனும் ஆயுதமாகும். ஆக எப்போதெல்லாம் அரசியல் கட்சிகளின் அடித்தளம் பலவீனம் ஆகுமோ, எப்போதெல்லாம் அரசியல்வாதியின் மவுசு குறைய ஆரம்பிக்குமோ அல்லது தரம் குறையுமோ, அல்லது பெயர்தாங்கி மார்க்க அமைப்புகள் அரசியல் பிரபலியத்தை பெற விரும்புமோ, ஏனைய அமைப்புகளை, அரசியல் கட்சிகளை அல்லது அரசியல்வாதிகளை தாழ்த்தி காட்ட எண்ணுமோ அப்போதெல்லாம் அவர்களை அஹ்மதிகளுடன் இணைத்து, பாருங்கள்! இது எவ்வளவு பெரிய அநியாயம் மற்ற நாடுகளின் தாக்கத்திற்கு ஆளாகி இவர்கள் அஹ்மதிகளை முஸ்லிம்களோடு இணைக்க விரும்புகின்றனர் என்று கூறுகின்றனர். அவர்களது எண்ணத்தின்படி அஹ்மதிகள் கத்மே நுபுவ்வத்திற்கு எதிரானவர்கள் ஆவார்கள்.

இஸ்லாத்தின் மீது வேதனை கொள்ளக்கூடிய இந்த பெயர்தாங்கிகள் நாங்கள் நபி (ஸல்) மீது எவ்வித இழுக்கும் ஏற்பட விடமாட்டோம், ஒருபோதும் இவ்வாறான அநீதி ஏற்பட விடமாட்டோம் எனக் கூறுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனது அரசியல் அஜண்டாக்கள் உள்ளன. ஒவ்வொருவருக்கும் தனது சுயலாபங்கள் இருக்கின்றன இவற்றில் வலுக்கட்டாயமாக அஹ்மதிகள் உள்ளே இழுக்கப்படுகின்றன. ஏனென்றால் இது மிக எளிதான வேலையாகும். அரசாங்க உறுப்பினர் அல்லாதவர்களும் அசம்பிளியின் அரசாங்க உறுப்பினர்களும் முன்னணியில் வந்து அஹ்மதிகளுக்கு எதிராக பேசுகின்றனர். கடந்த நாட்களில் பாகிஸ்தானின் பாராளுமன்றத்தில் அரசியல் கட்சி அல்லது ஆளும் கட்சி தனது இலாபத்திற்காக செய்த சட்டதிருத்த வரையறையில் மாற்றம் செய்ததில் இவற்றை தான் பார்க்க முடிந்தது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிலைப்பாடு என்னவென்றால், மற்ற நாடுகளின் சக்திகளிடம் எங்களை பாகிஸ்தானின் பாராளுமன்ற சட்டத்தில் திருத்தம் செய்து, சட்டத்தின் பார்வையில் எங்களை முஸ்லிம்களாக ஆக்குங்கள் என நாங்கள் ஒருபோதும் கூறியதுமில்லை; பாகிஸ்தானின் அரசாங்கத்திடமும் இதற்காக நாங்கள் ஒருபோதும் பிச்சை கேட்டதுமில்லை. மேலும் எங்களை எந்த அசம்பிளியும், அரசாங்கமும் முஸ்லிம் என்று அழைப்பதற்கு எங்களுக்கு எந்த சான்றிதழின் தேவையுமில்லை. நாங்கள் எங்களை முஸ்லிகள் என்று கூறுகின்றோம். ஏனென்றால் நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். எங்களை அல்லாஹ்வும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களும் முஸ்லிம்களாக்கியுள்ளனர். நாங்கள் லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என கலிமா கூறுகின்றோம். நாங்கள் இஸ்லாத்தின் அனைத்து கடமைகளின் மீதும், ஈமானின் அனைத்து கடமைகளின் மீதும் நம்பிக்கை கொள்கின்றோம். நாங்கள் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்கின்றோம். நாங்கள் அல்லாஹ் கூறியது போன்று, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என ஏற்றுக்கொள்கிறோம். அதனைதான் தற்போது நான் ஓதினேன். நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள் என்பதில் மிகத் தெளிவாக நிலைபெற்றுள்ளோம். எங்கள் மீது நாங்கள் காத்தமே நுபுவ்வத்திற்கு எதிரானவர்கள் என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என ஏற்பதில்லை என குற்றம் சாட்டப்படுகிறது. இது எங்கள் மீது சாட்டப்படும் மிகவும் மோசமான, வெறுக்கதக்க குற்றச்சாட்டாகும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்**:- உண்மையை அறிந்து பல அரபியர்கள் பையத் செய்து அஹ்மதிய்யத்தில் இணையும்போது இதனைதான் கூறுகின்றார்கள். அதாவது நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக எங்களது ஆலிம்களிடம் கேட்டபோது அவர்கள் இதைபோன்ற விஷயங்களையே கூறினார்கள். அதாவது அஹ்மதிகள் திருக்குர்ஆனை ஏற்பதில்லை; அவர்கள் தங்களுக்கென்று தனியாக ஒரு குர்ஆனை உருவாக்கி வைத்துள்ளனர். இவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறுதி நபியாக ஏற்பதில்லை; மாறாக மிர்ஸா சாஹிபைதான் இறுதி நபியாக கருதுகின்றனர். அவர்களது ஹஜ் வேறுபட்டதாகும் அவர்கள் ஹஜ் செய்வதில்லை; அவர்களது கஃபா வேறாகும் அவர்கள் கஃபாவை நோக்கி தொழ மாட்டார்கள். ஆனால் நாங்கள் உண்மையை ஆராய்ந்தபோது இந்த பெயர்தாங்கி ஆலிம்களின் உண்மை நிலை வெளிப்பட்டது .மேலும் இந்த அஹ்மதியல்லாத மவ்லவிகள் தனது பொய்களின் காரணமாக பலர் அஹ்மதிய்யத்தை ஏற்பதற்கு வழியாக அமைகின்றனர். ஆக, இந்த மவ்லவிகள் பொய் கூறிக்கொண்டு ஒரு வகையில் நமது தப்லீக் பணியை செய்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இல்ஹாம்கள் திருக்குர்ஆனை இறைவேதமாக கூறுகிறது. அனைத்து நன்மைகளின் ஊற்று என்று கருதுகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் எனக் கூறுகிறது. இவ்வாறு இருக்கையில் நாம் திருக்குர்ஆனை எவ்வாறு ஏற்காமல் இருக்கமுடியும்? நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என எவ்வாறு ஏற்காமல் இருக்கமுடியும்? இந்த வகையில் திருக்குர்ஆன் தொடர்பாக அன்னாரது ஓர் இல்ஹாம் உள்ளது. அதாவது **அல் கைரு குல்லுஹூ ஃபில் குர்ஆன்** -

எல்லா நன்மையும் திருக்குர்ஆனில் உள்ளது. இதனைப் போன்று அன்னார் எவர் குர்ஆனுக்கு கண்ணியம் அளிப்பாரோ அவர் விண்ணில் கண்ணியம் பெறுவார் எனக் கூறியுள்ளார்கள். அன்னார் எனது இல்ஹாமிற்கு கண்ணியம் வழங்குங்கள் எனக் கூறவில்லை. அன்னாரது இல்ஹாம்கள் திருக்குர்ஆனின் தொண்டு செய்பவை ஆகும். அதற்கு தனியான அல்லது நிரந்தர எந்த தகுதியும் இல்லை. எந்த நன்மை தேடுவதாக இருந்தாலும் எந்த வழிகாட்டலை தேடுவதாக இருந்தாலும், சமுதாயத்தின் எந்த பிரச்சனை தொடர்பாக நாம் வழிகாட்டல் பெறுவதாக இருந்தாலும் நாம் திருக்குர்ஆனிலிருந்துதான் பெறுகிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பல்வேறு இல்ஹாம்கள் அவற்றிற்கு தெளிவும் விளக்கமும் வழங்குகின்றன.

தன்னைப்போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள் என்பது தொடர்பாக எழுதிய எண்ணற்ற எழுத்துகள் உள்ளன. அது தவிர காத்தமுன் நபிய்யீன் என்ற வார்த்தை வரக்கூடிய இந்த இல்ஹாமும் உள்ளது. அந்த இல்ஹாம் இதுவாகும் : **ஸல்லி அலா முஹம்மதிவ் வ ஆலி முஹம்மதின் ஸய்யிதி உல்தி ஆதம் வ காத்தமன் நபிய்யீன்**. அதாவது ஆதமின் சந்ததிகளின் தலைவரும் காத்தமுன் நபிய்யீனும் ஆகிய முஹம்மது (ஸல்) மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் தருது (ஸலவாத்) ஓதுவீராக. இந்த இல்ஹாம் பல்வேறு சமயங்களில் இரண்டு மூன்று முறை இறங்கியது. பிறகு இந்த இல்ஹாமும் இறங்கியது: அதாவது குல்லு பரக்கத்தின் மின் முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம். எல்லாவித அருளும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமே உள்ளது. பிறகு அன்னார் தனது நூல் தஜல்லியாத்தே இலாஹியாவில் எழுதுகிறார்கள்: அதாவது நான் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தாக இருந்திருக்காவிட்டால் மேலும் அன்னாரை பின்பற்றாமல் இருந்திருந்தால் அனைத்து மலைகள் அளவிற்கு என்னுடைய செயல்கள் இருந்திருந்தாலும் இறைவனுடன் உரையாடுவதற்கான இந்த அந்தஸ்தை பெற்றிருக்க முடியாது ஏனென்றால் தற்பொழுது முஹம்மது (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தை தவிர அனைத்து நுபுவ்வத்தும் முடிந்து விட்டன.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்**:- ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றக்கூடியவர்கள் ஆவார்கள். அன்னாரது இல்ஹாம்களும் திருக்குர்ஆனை பின்பற்றக்கூடியவையும் அதனுடைய விளக்கமும் ஆகும். ஒருவேளை நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம்களை திருக்குர்ஆனை விட மேலானவையாகக் கருதினால் நாங்கள் இன்று பொருள் தியாகங்கள் செய்து உலகம் முழுவதும் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பை வெளியிட்டு வருகிறோமே இதற்கு பதிலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம்களை வெளியிட்டிருப்போம். தற்போது 75 மொழிகளில் திருக்குர்ஆன் முழுமையாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. சில மொழிகளில் மொழிபெயர்ப்பு நடைபெறுகிறது. 111 மொழிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்குர்ஆன் வசனங்களின் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளன. பெரிய பெரிய இஸ்லாமிய அரசுகளே! பணவசதி படைத்த அமைப்புகளே! நீங்கள் எத்தனை மொழிகளில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பை வெளியிட்டுள்ளீர்கள் எனக் கூறுங்கள் பார்க்கலாம்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்**:- காத்தமுன் நபிய்யீன் என்பதன் உண்மையான பொருளையும் அதன் ஆன்மாவையும் அஹ்மதிகளாகிய நாங்கள்தான் புரிந்துள்ளோம். மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக இருப்பதனை உலகின் பல்வேறு நாடுகளில் தனது மொழிகளில் அஹ்மதிகள்தான் வெளியிட்டு வருகிறார்கள். பிறகும் கூட இந்த மக்கள் அஹ்மதிகள் கத்தமே நுபுவ்வத்திற்கு எதிரானவர்கள் எனக் கூறுகின்றனர் - நவூதுபில்லாஹ். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கத்தமே நுபுவ்வத்தின் உண்மைத்துவத்தின் எப்படிபட்ட அறிவு மற்றும் ஞானத்தை வழங்கியுள்ளார்கள் என்றால் அதன் அருகில் கத்தமே நுபுவ்வத்தின் நிழலை தூக்குவதற்கான வாதம் புரியக்கூடிய இவர்களால் ஒருபோதும் செல்ல முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**:- இதனையும் நினைவில் கொள்ளுங்கள். அதாவது நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என ஏற்பதில்லை என என் மீதும் எனது ஜமாஅத்தினர் மீதும் குற்றம் சாட்டப்படுகிறது. இது எங்கள் மீது சாட்டப்படும் மிகப்பெரிய பொய் குற்றச்சாட்டாகும். நாங்கள் எந்த அளவு உண்மையான நம்பிக்கை, ஞானம் மற்றும் தெளிவுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீனாக நம்பிக்கையும் உறுதியும் கொள்கிறோமோ அதில் இலட்சத்தில் ஒரு பங்கு கூட ஏனைய மக்கள் நம்பிக்கை கொள்வதில்லை. அவர்களுக்கு இப்படிப்பட்ட அறிவுத் திறனே கிடையாது. அவர்கள் காத்தமுல் அன்பியாவின், கத்மே நுபுவ்வத்தில் உள்ள உண்மை மற்றும் இரகசியத்தை புரிவதேயில்லை. அவர்கள் தனது மூதாதையர்களிடமிருந்து இந்த வார்த்தையை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அதன் உண்மை தன்மையை அறியாதவர்களாவார்கள். அவர்களுக்கு கத்மே நுபுவ்வத் என்றால் என்ன? அதன் மீது நம்பிக்கை கொள்வதன் பொருள் என்ன? என்பது கூட தெரியாது. ஆனால் அல்லாஹ் சிறந்ததாக கருதக்கூடிய அந்த நிலையான பார்வையுடன் நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியாவாக நம்பிக்கை கொள்கிறோம். மேலும் அல்லாஹ் எங்கள் மீது கத்மே நுபுவ்வத்தின் உண்மையை எவ்வாறு திறந்துள்ளான் என்றால் அந்த இறைஞானத்தின் பானம் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது அதில் ஒரு சிறப்பான இன்பத்தை அடைகிறோம். இந்த ஊற்றிலிருந்து பருகியவரை தவிர அதனைப் பற்றி யாராலும் கணிக்க முடியாது.

பிறகு கத்மே நுபுவ்வத்தின் உண்மைத்தன்மையை விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: அதாவது அல்லாஹ் நமக்கு காத்தமுல் முஃமினாக, (நம்பிக்கையாளர்களில் சிறப்பானவராக) காத்தமுல் ஆரிஃபீனாக, (இறைஞானம் பெற்றவர்களில் சிறப்பானவராக) காத்தமுன் நபிய்யீனாக (நபிமார்களில் சிறப்பானவராக) இருக்கக்கூடிய அந்த நபியை வழங்கியிருக்கிறான். அவ்வாறே ஜாமிவுல் குதுப் (அனைத்து வேதங்களையும் உள்ளடக்கிய) மற்றும் காத்தமுல் குதுபாக இருக்கக்கூடிய அந்த வேதத்தை அன்னார் மீது இறக்கியுள்ளான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள் அன்னார் மீது நுபுவ்வத் முடிவடைந்து விட்டது. இந்த நுபுவ்வத் ஒருவரை கழுத்தை நெறித்து முடிவுக்கு கொண்டு வருவது போன்று அல்ல. இவ்வாறு செய்வது எவ்வித பெருமைக்குரியதுமில்லை. மாறாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நுபுவ்வத்

முடிவு பெற்றுவிட்டது என்பதன் பொருள் இயல்பாக நுபுவ்வத்தின் அந்தஸ்துகள் அன்னாரின் மீது முற்றுப்பெற்று விட்டது. அதாவது ஆதம் முதல் ஈஸா (அலை) வரை நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அந்த பலதரப்பட்ட அந்தஸ்துகள் அனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஒன்றிணைக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு அன்னார் இயல்பாக காத்தமுன் நபிய்யீன் ஆனார்கள். இவ்வாறே முன்னர் இருந்த பல்வேறு வேதங்களில் தொடர்ந்து வந்துகொண்டிருந்த அறிவுரைகள் மற்றும் ஞானங்கள் போன்றவை திருக்குர்ஆனில் வந்து முற்று பெற்றன. இவ்வாறு திருக்குர்ஆன் காத்தமுல் குதுப் ஆனது.

ஆக, நமது எதிரிகள் அறியாமல் இருக்கும் உண்மை இதுவாகும். மேலும் ஆலிம்களின் கைகளில் மாட்டிக்கொண்டிருக்கும் மக்களை அவர்கள் தனது பிடியிலிருந்து வெளியே வர விடுவதேயில்லை. ஒருவேளை அவர்களின் பின்னால் செல்லக் கூடியவர்களுக்கு இந்த உண்மை தெரிய வந்தால் பிறகு மார்க்கத்தை வியாபாரமாக்கி வைத்துள்ள அவர்களின் அந்த வியாபாரம் நடைபெறாது.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்**:- இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் தனது அனைத்து ஆற்றல் மற்றும் வசதியைக் கொண்டு ஏகத்துவம் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் அந்தஸ்தை உலகின் ஒவ்வொரு பகுதியிலும், கிராமங்களிலும், தெருக்களிலும் பரப்பி வருகிறது. ஆக, நாங்கள்தான் கத்மே நுபுவ்வத்தைப் பற்றியும் அன்னார் மீது இறங்கிய ஷரீஅத்தைப் பற்றியும் சரியாக புரிந்து வைத்துள்ளோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் ஏனைய மதத்தினருக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தைப் பற்றி தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். அன்னாரின் அந்தஸ்தைப் பற்றி மட்டும் எடுத்துரைக்கவில்லை; மாறாக இதற்கு முன்னர் இருந்த நபிமார்களின் போதனைகள் எந்தளவு மாறிவிட்னவென்றால் அந்த நபிமார்களின் அந்தஸ்து மற்றும் அவர்களின் உண்மைத்துவம் பற்றி அவர்கள் உண்மையாளர்களாக இல்லையா என அறிய முடியாமல் இருந்தது, அன்னார்தான் முந்தைய நபிமார்களின் நிலைமை மற்றும் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தினார்கள். இதுவும் அன்னாரது உயர்ந்த அந்தஸ்து ஆகும் என எடுத்துரைத்தார்கள்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்**:- இன்றைய ஆலிம்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது ஆட்சேபனைகளை கூறி வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏனைய மதங்களுக்கு அந்த மதங்களின் உண்மை முகத்தை காட்டி அவர்களது குறைகளை எடுத்துக்காட்டுவதற்கு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையை நிரூபிப்பதற்கு தைரியம் இல்லை. இந்த பணியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தர்பிய்யத் மற்றும் ஞானத்தின் மூலம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் செய்து கொண்டிருக்கிறது. அவ்வாறு இருந்தும் கூட இவர்களது பார்வையில் நாம் கா∴பிர்; அவர்கள் மூமின்கள் ஆவர்.

நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். நாங்கள் இறைவனின் வேதமாகிய திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்கின்றோம். மேலும் எங்களது தலைவர் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனது ரஸூல் மற்றும் நபி ஆவார் என்றும் அன்னார் தலைசிறந்த மார்க்கத்தை கொண்டு வந்தார்கள் என்றும் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் அன்னார் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள் என்றும்

அன்னாருக்குப் பிறகு அன்னாருடைய தர்பிய்யத்திலிருந்து பலன் பெற்றவரை தவிர எந்த நபியும் இல்லை என்றும் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் எவர் திருக்குர்ஆனில் ஏதாவது ஒன்றைக் கூட்டுவாரோ, அல்லது ஏதாவது ஒரு பகுதியை குறைப்பாரோ அவர் ஷைத்தானும், தீயவரும் ஆவார். மேலும் நாங்கள் கத்மே நுபுவ்வத் பற்றி அல்லாஹ்வின் அனைத்து ரஸூல்மார்கள் மற்றும் அனைத்து நபிமார்களை விட மேலான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நுபுவ்வத்தின் அனைத்து அந்தஸ்துகளும் முழுமையடைந்து விட்டன என பொருள் கொள்கின்றோம். மேலும் நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு நுபுவ்வத் அந்தஸ்தை அன்னாருடைய உம்மத்தை சார்ந்தவரால், அன்னாரை முழுமையாக பின்பற்றுவரால், அன்னாருடைய ஆன்மீகத்திலிருந்தே அனைத்து நன்மையும் பெற்றவரால், அன்னாருடைய ஒளியிலிருந்து ஒளிமயமானவரால் மட்டுமே பெற முடியும் என நம்பிக்கை கொள்கிறோம். மேலும் இதில் எவ்வித அந்நியமும் இல்லை, இதில் எவ்வித தன்மானம் கொள்வதற்கான இடமில்லை. மேலும் இது எவ்வித தனியான நுபுவ்வத்தும் இல்லை. இதில் ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லை. மாறாக இது மற்றொரு கண்ணாடியில் தோன்றிய அஹ்மது முஜ்தபா ஆவார்கள். அல்லாஹ் கண்ணாடியில் காட்டிய தோற்றத்தை கண்டு எவரும் தன்மானம் கொள்ள மாட்டார். ஏனென்றால் மாணவர் மீது, பிள்ளைகள் மீது தன்மானம் பொங்காது. ஆக, எவர் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அருள்களை பெற்று அன்னார் மீது தன்னை மாய்த்துக் கொண்டு வருவாரோ அவர் உண்மையில் அவரே ஆவார். ஏனென்றால் அவர் முழுமையான அர்ப்பணிப்பின் அந்தஸ்தில் இருப்பார். அன்னாரது பண்பை மேற்கொண்டவராக இருப்பார். அன்னாரது போர்வையை போர்த்தியவராக இருப்பார். அன்னாரிடமிருந்தே தனது ஆன்மீகத்தைப் பெற்றவராக இருப்பார். அன்னாரது அருளினாலேயே உயர் தகுதியை அடைந்திருப்பார். இதுவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள்களுக்கு சாட்சியாக விளங்கக்கூடிய உண்மையாகும். மக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகை, தனது மேலான அன்பு மற்றும் பரிசுத்தத்தின் காரணமாக அன்னாரிடத்தில் தன்னை மாய்த்துக் கொண்ட அன்னாரை பின்பற்றக் கூடியவரின் ஆடையில் மக்கள் பார்ப்பார்கள். அவருக்கு எதிராக பேசுவது அறிவீனமாகும். ஏனென்றால் இது அன்னார் (ஸல்) அவர்கள் அப்தர் (ஆண் சந்ததியற்றவர்) இல்லை என்பதற்கு அல்லாஹ்விடமிருந்து வந்த ஆதாரம் ஆகும். சிந்திக்க கூடியவருக்கு இதை விளக்கி கூற தேவையில்லை.

மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் பௌதீக ரீதியில் எந்த ஆண்களுக்கும் தந்தையில்லை. ஆனால் நுபுவ்வத்தின் அருள் என்ற ரீதியில் ஆன்மீகத்தில் உயர்வை பெற்ற ஒவ்வொருவருக்கும் தந்தையாவார்கள் . அன்னார் அனைத்து நபிமார்களின் காத்தம் மற்றும் (இறைவனால்) ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் தலைவர் ஆவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முத்திரை பெற்றவரால், அன்னாரது நடைமுறையை பின்பற்றுபவரால் மட்டுமே தற்பொழுது இறை சன்னிதியில் நுழைய முடியும். தற்பொழுது எந்த அமலும் எந்த இபாதத்தும் அன்னாரது நபித்துவத்தை ஏற்காமல், அன்னாரது மார்க்கத்தில் உறுதியாக நிலைபெற்று நிற்காமல் இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாது. மேலும் அன்னாரை விட்டு விலகியவர், தனது ஆற்றல் மற்றும் சக்திக்கேற்ப அன்னாரை பின்பற்றாதவர் அழிந்து போய்விட்டார். அன்னாருக்கு பிறகு எவ்வித ஷரீஅத்தும் வர முடியாது. எவராலும் அன்னாரது வேதத்தை அன்னாரது போதனைகளை

ரத்து செய்யவும் முடியாது. எவராலும் அன்னாரது பரிசுத்தக் கூற்றுக்களை மாற்றவும் முடியாது. எந்தவொரு மழையும் அன்னாரது திருக்குர்ஆனின் அடை மழையைப் போன்று ஆக முடியாது. எவர் திருக்குர்ஆனை பின்பற்றுவதில் சிறிதளவும் தூரம் விலகுவாரோ அவர் ஈமானின் வட்டத்திலிருந்து வெளியேறி விட்டார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து உறுதியான இந்த விஷயங்களை பின்பற்றாதவரை எவராலும் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கட்டளைகளில் ஒரு சின்ன கட்டளையை கூட விடக்கூடியவர் வழிதவறி விட்டார். மேலும் எவர் இந்த உம்மத்தில் நுபுவ்வத்திற்கான வாதம் புரிவாரோ அவர் தன்னை சிறந்த மனிதராகிய முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து தர்பிய்யத்தை பெற்றவர் என்றும், அன்னாரது சிறந்த முன்மாதிரி இன்றி இவையனைத்தும் ஒன்றுமற்றவையாகும் என்றும் திருக்குர்ஆன் காத்தமுஷ் ஷரீஆ (ஷரீஅத்துகளிலெல்லாம் சிறந்த ஷரீஅத்) என்றும் உறுதிகொள்ள மாட்டாரோ அவர் அழிந்துபோய் விட்டார். அவர் காஃபிர்களுடனும் தீயவர்களுடன் சென்று சேர்ந்து விட்டார். எவர் நபித்துவத்திற்கான வாதம் புரிவாரோ அவர் தன்னை நபி (ஸல்) அவர்களின் உம்மத்தை சார்ந்தவர் என்றும், தான் பெற்றதெல்லாம் நபி (ஸல்) அவர்களின் அருளினால் பெற்றவை என்றும், இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோட்டத்தின் ஒரு கனி என்றும், அன்னாரது அடை மழையின் ஒரு துளி என்றும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளியின் ஒரு கதிர் என்றும் நம்பிக்கை கொள்ளமாட்டாரோ அவர் சாபத்திற்குரியவர் ஆவார். அவர் மீது, அவரது நண்பர்கள் மீது, அவரை பின்பற்றக்கூடியவர் மீது, அவரது உதவியாளர்கள் மீது அல்லாஹ்வின் சாபாம் உண்டாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:- வானத்தின் கீழ் முஹம்மது முஜ்தபா (ஸல்) அவர்களைத் தவிர வேறெந்த நபியும் இல்லை. திருக்குர்ஆனைத் தவிர நமக்கு வேறெந்த வேதநூலும் இல்லை. மேலும் எவர் இதற்கு எதிராக செயல்படுவாரோ அவர் தன்னைதானே நரகத்தின்பால் கொண்டு சென்று விட்டார்.

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்**:- அன்னார் (அலை) அவர்கள் எண்ணற்ற இடங்களில் கத்மே நுபுவ்வத்தின் உண்மைத்துவம் பற்றியும் அதன் அந்தஸ்து மற்றும் தனது அந்தஸ்து பற்றியும்தெள்ளத் தெளிவாக கூறியுள்ளார்கள்.

**குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்**:- இவ்வாறு அஹ்மதிகள் மீது இவர்கள் நாட்டிற்கு தொண்டாற்ற மாட்டார்கள், இவர்கள் நாட்டிற்கு நன்றியுடையவர்கள் இல்லை என ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஆனால் இன்று பாகிஸ்தானில் அஹ்மதிகள் மட்டும்தான் ஹுப்புல் வத்னி மினல் ஈமானி - நாட்டுப்பற்று ஈமானின் அங்கமாகும் என்பதன் மீது நம்பிக்கை வைத்துள்ளனர், அதன்படி செயல்படுகின்றார்கள், அவர்கள் தமது உயிர், பொருள் ஆகியவற்றை தியாகம் செய்யக் கூடியவர்கள் என்று என்னால் உறுதியாக கூற முடியும். நாங்கள் அரசியல் வியாபாரத்தை மேம்படுத்த வெறும் சொற்பொழிவாற்றக் கூடியவர்கள் அல்ல. எங்களுக்கு அரசியலுடன் எந்தத் தொடர்பும் கிடையாது. நாங்கள் மார்க்கத்திற்காக உயிரை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் ஆவோம். ஆனால் மார்க்கத்தின் பெயரில் அரசியல் செய்யக் கூடியவர்களோ, மார்க்கத்தின் பெயரில் கொலை செய்யக் கூடியவர்களோ அல்ல. நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களை காத்தமுன் நபிய்யீன் என ஏற்றுக் கொண்டுள்ளோம், உள்ளத்தளவிலும் நம்பிக்கை கொள்கிறோம். அன்னாரது கண்ணியத்திற்காக எல்லாவித தியாகங்களை செய்கின்றோம்; செய்வதற்கு ஆயத்தமாக உள்ளோம்; செய்துகொண்டே இருப்போம் - இன்ஷா அல்லாஹ். பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளின் கடமை என்னவென்றால் அவர்கள் ஆரம்பத்திலிருந்து தற்போது வரை எந்த நாட்டிற்காக அஹ்மதிகள் தியாகங்களை செய்து வந்தார்களோ அந்த நாட்டை அல்லாஹ் சாந்தி, சமாதானத்துடன் வைப்பதற்காக, அநியாய தலைவர்கள் மற்றும் சுயநலன் கொண்ட ஆலிம்களிடமிருந்து அதனை பாதுகாப்பதற்காக, உலகின் சுதந்திர மற்றும் கண்ணியமிகு நாடுகளில் பாகிஸ்தானும் ஒரு நாடாக எண்ணப்படுவதற்காக துஆ செய்து வாருங்கள்.

**Friday Sermon Delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba) on 13-10-2017**

**Tamil Translation: Moulavi N.Ziaul Haq Sahib**

**Published by NAZARAT NASHR-O- ISHA' AT,**

**SADR ANJUMAN AHMADIYYA QADIAN 143 516**